**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண். 44/2024**

2024-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12ம் நாள் வாதி சாட்சியாகிய வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.ஜெயக்குமார், எழுத்தர் நிலை III என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | அலமேலு அம்மாள் |
| வயது | - | 84 |
| கணவர்/தந்தை பெயர் | - | ரகுராமன் |
| கிராமம் | - | குன்னத்தூர் |
| வட்டம் | - | செய்யாறு |
| தொழில் | - | |

12.08.2024

வா.சா. 1

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 1ம் வாதியாவேன். என் தரப்பில் தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தை இவ்வழக்கில் ஒரு பாகமாக வாசித்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். பிரமாணவாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 20.12.1974 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் சார்பதிவாளர் அலுவலக நகல் வாதசாஆ.1, 16.04.1998 தேதியிட்ட கிரய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் வாதசாஆ.2, கணினி பட்டா எண் 309 வாசதாஆ.3, மாதிரி வரைபடம் வாதசாஆ.4, 18.01.2024 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வாதசாஆ.5, அதை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வாதசாஆ.6, அதை 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வாதசாஆ.7 தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.